04/01/2016

## Life Response பற்றிய விளக்கவுரை - Part - I

Life Response என்பது கடலைப்போல் பரந்துவிரிந்த தலைப்பு. இருந்தாலும் அதில் சில விதிமுறைகளை தேர்ந்தெடுத்து அவற்றைப்பற்றி விவரமாகப் பேச விரும்புகிறேன். விதிமுறைகளைப்பற்றி பேசும்முன் Life Response பற்றிய பொதுப்படையான சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். மனிதன், வாழ்க்கைக்கென்று சில விதிமுறைகள் உள்ளன என்பதையே நெடுநாளாக அறியாமலிருந்தான். பௌதிகம், வேதியியல், விலங்கியல் மற்றும் தாவரவியல் போன்ற விஞ்ஞான துறைகளை முறையாக அவன் கற்க முயன்றபோது எத்தனையோ புதுபுது விதிமுறைகளைக் கண்டறிந்தான். அதனால் மேற்கூறிய துறைகள் எல்லாம் இன்று நன்கு வளர்ந்து விட்டன. இயற்பியல் விஞ்ஞானிகள் இன்று சூரியன் எப்படி இயங்குகிறது? புவி ஈர்ப்பு சக்தி எப்படி செயல்படுகிறது? ஒளி எப்படி பரவுகிறது என்றெல்லாம் துல்லியமாகக் கண்டறிந்துள்ளனர். வேதியியல் வல்லுநர்களோ அணுவையேப் பிளந்து அணுகுண்டு தயாரிக்கும் அளவிற்கு ஜடத்தின் ரகசியங்களை கண்டறிந்துள்ளனர். விலங்கியல் நிபுணர்கள் உலகத்திலுள்ள விலங்குகளை எல்லாம் வகைப்படுத்தி Art of classification கடைசிவரைக்கும் கொண்டுபோய் விட்டனர். தாவரங்கள் எப்படி வளர்கின்றன? எப்படி உணவு தயாரிக்கின்றன? எப்படி இனவிருத்தி செய்கின்றன? எவ்வகையான தாவரம் எங்கு வளரும்? என்றெல்லாம் தாவரங்களைப்பற்றிய நுணுக்கமான விவரங்களை தாவரவியல் நிபுணர்கள் கண்டறிந்தார்கள். விஞ்ஞானத்தைப்பற்றி இந்தளவு ஆர்வம் கொண்ட மனிதன் Life Response-உம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு துறைதான் என்று நினைக்க முன்வரவில்லை. Life Response என்ற சப்ஜெக்ட் நீண்ட காலமாகவே புரியாத புதிராகத்தான் இருந்து வந்துள்ளது.

உலகப் புகழ்பெற்ற இலக்கியவாதிகள் உள்ளனர். அவர்கள் படைத்துள்ள காவியங்கள், படைப்புகள் என்று எல்லாமே சிறந்தவை என்று மக்கள் மனதில்படுகிறது. ஏன் அவைகள் சிறந்தவைகளாக விளங்குகின்றன? என்று கேட்டால் வாழ்க்கை விதிமுறைகள் வெளிவரும்படி காவியங்கள் படைத்துள்ளனர். அதனால் அவைகள் பிரசித்தமாக உள்ளன என்று பதில் அளிக்கிறார்கள். அப்படி என்ன விசித்திரமாக வாழ்க்கை விதிமுறைகளைக் கண்டறிந்துவிட்டார்கள் என்று கேட்டால், அது அவர்களுக்கு சரியாகச் சொல்லத் தெரிவதில்லை. உதாணரமாக ஷேக்ஸ்பியர் எழுதிய Hamlet நாடகத்தில் Hamlet அவன் தாயாரைக் கொல்ல ஏன் அவ்வளவு தயக்கம் காட்டுகிறான்? அதிலுள்ள Life Response என்ன என்றொரு கேள்வி நீண்ட நாளாகவே சரியான விடையில்லாமல் இருக்கிறது. அம்மாதிரியே ஒத்தல்லோ நாடகத்தில் டெஸ்டமோனாமேல் பிரியமாக இருந்த ஒத்தல்லோ அவளை சாகடிக்க எப்படி துணிகிறான என்றொரு கேள்விக்கும் இந்நாள்வரை சரியான பதிலில்லை. இம்மாதிரியே நம் நாட்டு இலக்கியங்களிலும் Life Response புரியாத இடங்கள் உள்ளன. உதாரணமாக பாரதத்தில் தர்ம நியாயத்தை அவ்வளவு நெறியாகக் கடைப்பிடித்து வந்த பாண்டவர்கள் பாரதப்போரில் அதர்மமான முறைகளுக்கு மாறிவிட்டதற்கான காரணம் என்ன? இந்த கேள்விக்கும் சரியான பதிலில்லை. இம்மாதிரியே ஒழுக்க சீலராக விளங்கிய ஸ்ரீ ராமன் வாலியை ஏன் மறைந்து நின்று அம்பெய்தார்? வண்ணானின் பேச்சைக் கேட்டுக் கொண்டு கற்புக்கரசியான சீதையை ஏன் காட்டிற்கு அனுப்பினார்? என்ற கேள்விகளுக்கு சரியான பதிலில்லாமல் இருக்கிறது.

இலக்கியங்கள் மட்டும் என்றில்லை. நிஜ வாழ்க்கையிலேயே நடந்த பல நிகழ்ச்சிகளுக்கு சரியான life response காரணம் கண்டறிய முடிவதில்லை. உதாரணமாக அஹிம்சைக் கொள்கையை போதித்த காந்தியடிகள் ஏன் குண்டடிபட்டு இறந்தார் என்ற கேள்விக்கு சரியான பதிலில்லை. அடுத்ததாக இருபதே வருட இடைவெளியில் ஜெர்மெனி ஏன் இரண்டு உலகப் போர்களைத் துவங்கியது. என்ன பாவத்திற்காக அறுபது லட்சம் யுதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். சரித்திர ரீதியாக ஏன் ஜெர்மெனி இரண்டு உலகப்போர்களைத் துவங்கியது என்று சரித்திர வல்லுநர்கள் விளக்கங்கள் வழங்கலாம். ஆனால் அன்னை பக்தர்களுக்கு அவை முழுதிருப்தி தராது. அவ்வாறே நம் உள்நாட்டு விவகாரங்களை எடுத்துகொண்டால்

நாட்டில் ஒற்றுமை உணர்வு அதிகரிக்கும்போது தமிழ் நாட்டில் மட்டும் திராவிட நாடு என்று தனி நாடாகப் பிரிந்துப்போக வேண்டும் என்று பிரிவினையை வலியுறுத்தும் கோரிக்கைகள் எழுப்பப்பட்டது ஏன் என்ற கேள்விக்கு சரியான பதிலில்லை. ஹிந்திதான் தேசிய மொழியாக வேண்டும் என்று மத்திய அரசு முடிவு எடுத்தபோது தமிழர்களைப் போலவே வங்காளிகளும் வங்காள மொழி பாதிக்கப்படும் ஆகவே வங்காளம் இந்தியாவைவிட்டு தனிநாடாக அறிவிக்கப்பட வேண்டும் என்று எதிர்ப்பு தெரிவித்திருக்கலாம். அப்படி வங்காளி எதிர்ப்பு தெரிவிக்காதபட்சத்தில் தமிழர்கள் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தது புரியாத புதிராக உள்ளது. இம்மாதிரி சரியான விடை தெரியாத life response புதிர்களுக்கெல்லாம் ஸ்ரீ கர்மயோகி அவர்கள்தான் முறையான விளக்கங்களை அளித்துள்ளார்.

அடுத்தபடியாக life response-ஐப்பற்றி மேலும் சில உண்மைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். Life Response என்பது பலத்தின் அடிப்படையில் நிகழ்வதாகும். அப்படி பார்க்கும் பொழுது யார் கை ஓங்கி இருக்கிறதோ அவர்களுக்கு சாதகமாகத்தான் Life Response இருக்கும். நீதி, நேர்மை எல்லாம் Life Response-இல் பார்க்க முடியாது. கிராமத்தில் பணக்கார பண்ணையார் ஊரில் உள்ள சிறு விவசாயியை மிரட்டி ஐந்து லட்சம் விலை போகக் கூடிய ஒரு ஏக்கர் நிலத்தை வெறும் 50,000-திற்கு எழுதி வாங்கிக் கொண்டால் அந்த transaction-ஐயும் Life Response ஒரு நிகழ்ச்சியாகக் காட்டுமே தவிர ஐந்து லட்ச ரூபாய் பெறுமான நிலத்தை வெறும் 50,000 ரூபாய்க்கு வாங்கியது அக்கிரமம் இதை அனுமதிக்க முடியாது என்று Life Response இத்தகைய நிகழ்ச்சிகளை அனுமதிக்க மறுப்பது கிடையாது. ஊருக்குள் வெள்ளம் வந்தால், வீட்டிலுள்ள பொருட்களைத்தான் அடித்துச் செல்லும் என்றில்லை. மரசாமான்கள், கட்டில், பீரோக்கள், கார், போன்ற வாகனங்கள் என்று ஜடப்பொருட்களையும் அடித்துச் செல்வதுபோல், நீச்சல் தெரியாத மனிதர்களையும்தான் அடித்துச் செல்லும். எப்படி வெள்ளத்திற்கு ஜடப்பொருட்கள், உயிருள்ள பொருட்கள் என்ற வித்தியாசமில்லையோ அம்மாதிரியே Life Response-க்கும் சாமான்கள் வேறு, மனிதர்கள் வேறு என்று வித்தியாசமில்லை. வெள்ளத்தால் நிகழ்ந்த பொருளின் சேதங்கள்பற்றிய விவரங்கள் பத்திரிக்கைகளில் வந்தால் கூடவே உயிர்ச் சேதம்பற்றிய விவரமும் வரும். அதாவது வந்த வெள்ளத்தால், ஆயிரம் கோடி ரூபாய்க்கு பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது என்று புள்ளி விவரங்கள் தெரிவித்தால் அதற்கு பக்கத்திலேயே 100 பேர்கள் அடித்து செல்லப்பட்டார்கள் என்ற புள்ளி விவரமும் இருக்கும். வெள்ளம் என்பது இயற்கையாக நிகழும் ஒரு பேரிடர். இயற்கை சக்திகள் வரம்புமீறி வெளிப்படும் சமயம் அந்த சக்தியால் விளையும் சேதம் என்ன என்று Life Response குறிப்பிடுமே தவிர அப்பாவி குழந்தைகள் வெள்ளத்தால் அடித்து செல்லப்படுவது நியாயமா, சரியா என்றெல்லாம் அது பார்ப்பதில்லை. வலியவன் எளியவனை அதிகாரம் செய்தால் அந்த அதிகாரத்தை Life Response ஏற்றுக் கொள்கிறதே தவிர அது நியாயம் இல்லை என்று அதை மறுப்பதில்லை. சீனா வலிமை மிகுந்த நாடு. ஆனால் அதற்கு அருகில் இருக்கும் திபெத் மக்கள் பலமோ, பொருளாதார பலமோ, ஆயுத பலமோ எதுவுமே இல்லாத மிக எளிமையான நாடு. 1950-ஆம் ஆண்டிலிருந்து சீனா திபெத்திய நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. இது அநியாயம், அக்கிரமம் என்று திபெத்தியர்கள் கண்டன குரல் எழுப்புகிறார்கள். இருந்தாலும் மற்ற உலக நாடுகளால் எந்த வகையாலும் இதை தடுக்க முடியவில்லை. ஆகவே இன்றுவரை சீனா ஆக்கிரமிப்பு திபெத்தில் தொடர்கிறது. இப்படி அதிகாரம் எங்கிருக்கிறதோ அந்தப் பக்கம் Life Response சாய்கிறது என்பதைப்போல் நீதி நியாயம் பார்க்காமல் எந்த காரியம் எல்லாம் நடத்திக் கொள்ள முடிகிறதோ அவற்றை எல்லாம் Life Response ஆதரிக்கச் செய்யும். உதாரணமாகப் பெண் சிசுவதை என்பது மிகவும் பாவமான காரியமாகும். ஆனால் பெண் குழந்தைகள் வேண்டாம் என்று நினைக்கின்ற குடும்பங்களில் இவை இன்றும்கூட சர்வ சாதாரணமாக நடக்கின்றன. அரசாங்க புள்ளி விவரங்களில் ஹரியானா மாநிலத்தில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 850 பெண் குழந்தைகளே உள்ளன என்று புள்ளி விவரங்கள் காட்டப்படுகிறது. அம்மாதிரியே வரதட்சணை கொடுமை என்பது ஆண் பெண்ணுக்குசெய்யும் கொடுமையாகும்.

அடுத்தபடியாக lif response-ஐ விவரமாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்பவர்களுக்கு விவரமாகவே பதில் கிடைக்கும். அதாவது இயற்பியலில் விஞ்ஞானி Newton அவர்கள் action and reaction are equal என்று குறிப்பிட்டுள்ளார். அதன்படி பார்த்தால், நாம் என்ன செய்கிறோமோ அதற்கு இணையான ரெஸ்பான்ஸ் கிடைக்கும் என்றாகிறது. ஆற்றில் படகு ஓட்டும்போது எந்தளவிற்கு துடுப்பை வைத்துக்கொண்டு நாம்

தண்ணீரை பின்னுக்குத் தள்ளுகிறோமோ அந்தளவிற்கு படகு தண்ணீரில் முன்னேறிப்போகும். அம்மாதிரிதான் action and reaction are equal என்று ஸ்ரீ கர்மயோகி அவர்கள் கூறுகிறார். இதே கருத்தை அவர் வேறு வகையாகவும் one to one correspondence என்று கூறுகிறார். அதாவது நாம் என்ன செய்கிறோமோ அதுபோல்தான் வாழ்க்கையும் நம்மிடம் திருப்பி நடந்து கொள்ளும். தமிழ்நாட்டில் இதே கருத்தை "வினை விதைத்தவன் வினை அறுப்பான். திணை விதைத்தவன் திணை அறுப்பான்' என்று பழமொழியாகவே சொல்லி உள்ளனர். நாம் மற்றவர்களிடம் சுயநலமாக நடந்து கொண்டால், மற்றவர்களும் நம்மிடம் அதே சுயநலத்துடன்தான் நடந்து கொள்வார்கள். இந்த உண்மையை விளக்கும் வகையில் ஒரு சிறு கதையுள்ளது. ஒரு கிராமத்துப் பணக்காரர் ஊரில் எவர் வீட்டு திருமணத்திற்குக் கூப்பிட்டாலும், அங்கே சென்று தன் கைத்தடியை வைத்துவிட்டு திரும்பி விடுவார். இவர் வீட்டுத் திருமணத்திற்கு ஊராரை அழைத்தபோது, ஊராரும் வந்து நிறைய கைத்தடிகளை வைத்து சென்றார்களாம். என்ன இது ஒரே கைத்தடியாக உள்ளது என்று அவர் அதிர்ச்சியில் வினவியபோது நீங்கள் மற்றவர்களுக்கு செய்ததைத்தான் மற்றவர்கள் உங்களுக்கு செய்துள்ளனர் என்று அங்கிருந்தவர்கள் பதிலளித்தனர். ஆபத்து காலத்தில் உதவியைக் கேட்டு வருபவர்களுக்கு சுயநலமாக ஈவு இரக்கமின்றி உதவி செய்ய மறுப்பவர்கள் உள்ளனர். அதே ஆபத்து இவர்களுக்கு வரும்போது மற்றவர்கள் இவர்களுக்கு உதவி செய்ய மறுப்பதுண்டு.

சுயநலம் மட்டும் என்றில்லை நாம் எந்த குண விசேஷத்தை வெளிப்படுத்துகிறோமோ அதேமாதிரியான குண விசேஷம்தான் நமக்கு மற்றவர்களிடமிருந்து கிடைக்கும். ஒரு பதவியில் இருக்கும்பொழுது அதிகாரம் செய்து அடுத்தவர்களை எடுத்தெறிந்து பேசி விரட்டி அடித்தார் என்றால் பதவியில் இருக்கும்வரை அந்த அதிகாரம் அவருக்கு செல்லும். மற்றவர்கள் அடங்கிப் போவார்கள். ஆனால் அவர் பதவியிலிருந்து ஒய்வு பெற்றபின் அதே அதிகாரத்தை ஊர் மக்கள் அவரிடமே திருப்பிக் காட்டி அவர் எப்படி தங்களை விரட்டி அடித்தாரோ அதே பாணியில் அவரை விரட்டியடிப்பார்கள். கடைக்குச் சென்று ஏதேனும் பொருள் வாங்க வேண்டும் என்று கேட்டால் எங்கள் கடையில் இல்லை. வேறு கடையில் சென்று கேளுங்கள் என்பார்கள். ஆட்டோ ஸ்டாண்ட்க்கு சென்று ஆட்டோ வருமா என்று கேட்டால் ஆட்டோ வராது வேறு வண்டியைப் பாருங்கள் என்பார்கள். வங்கி, போஸ்ட் ஆபீஸ் போன்ற இடங்களுக்கு சென்றால் தேவையில்லாமல் நம்மை மணிக்கணக்கில் காக்க வைத்தும், விரட்டி அடித்தும் அனுப்புவார்கள். நாம் கொடுத்த அதே treatment இன்று நமக்கு திருப்பி வருகிறது என்று புரிந்து கொள்வதை தவிர வேறுவழியேயில்லை. சில சமயங்களில் Life Response என்பது நாம் வெளிப்படுத்தும் குண விசேஷத்திற்கு நேர் எதிர்மாறானதாக இருக்கும். அதாவது நாம் பயந்த சுபாவம் கொண்டவராக இருந்தால், நம்மோடு பழகுபவர்கள் எல்லோரும் நம்மை அதிகாரம் செய்வார்கள். பக்கத்து வீட்டுக்காரர் நம்மை கடைக்கு அனுப்பி ஏதேனும் பொருள் வாங்கி வா என்பார். ஸ்கூட்டரில் போகும் பயந்த சுபாவம் உள்ளவர்கள் வேறுயாருடனாவது மோதிவிட்டார் என்றால் அடுத்தவர் மேல்தான் தவறு என்றாலும் இவர் ஏதோ தவறு செய்தமாதிரி இவரைக் குற்றவாளியாக்கி தகாத வார்த்தைகளால் திட்டி அடிக்கவும் செய்வார்.

குடும்பத்திலும் சரி, வெளி உலகத்திலும் சரி எல்லோருக்கும் நாம் அடங்கிப் போக வேண்டியுள்ளது. அடுத்தவர் எல்லோரும் நம்மை அதிகாரம் செய்வதை வைத்துப் பார்த்தால், ஒருவேளை நாம் எல்லோரையும் அதிகாரம் செய்கிறோமா என்று நினைக்கத் தோன்றும். ஆனால் உண்மையில் அப்படி இல்லை. நாம் பயந்த சுபாவம் கொண்டவராக உள்ளதால், மற்றவர் எல்லோருக்கும் நம்மை அதிகாரம் செய்ய தோன்றுகிறது. அம்மாதிரியே அப்பாவி விவரம் தெரியாமல் இருப்பவர்களை பார்ப்பவர்கள் எல்லாம் ஏமாற்றுவார்கள். அம்மாதிரியே அப்பாவியானவர் அவர் தன் டூ விலரை ரிப்பேருக்கு விட்டால், செய்யாததைச் செய்ததாகச் சொல்லி 500 ரூபாய் வாங்கவேண்டிய இடத்தில் 1000 ரூபாய் வாங்கிவிடுவார்கள். 10000 ரூபாய் சம்பளம் கொடுத்து 15000 ரூபாய் பெறுமானமுள்ள உழைப்பை வாங்கிவிடுவார்கள். எல்லா இடங்களிலும் தான் ஏன் ஏமாற்றப்படுகிறேன். ஒருவேளை தான் அப்படிபட்டவரோ என்று அவருக்கு சந்தேகம் வந்தால் தான் விவரம் தெரியாத அப்பாவியாக இருப்பதால்தான் இவ்வாறு அனைவரும் ஏமாற்றுகிறார்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். அந்த அப்பாவித்தனத்தை விட்டொழித்து தானும் உஷாராக மாறும் பொழுது இந்த ஏமாற்று வேலைகள் முடிவுக்கு வருவதைப் பார்க்கலாம். இப்படி வாழ்க்கையில் நேரெதிரானவைகள் சந்திக்கும் இடங்கள் நிறையவே உள்ளது. கையில் காசில்லாதவர்கள், வருமானத்திற்கு வழி இல்லாதவர்கள் எல்லோரும்

யாராவது ஒரு பணக்காரன்பின் போய்க்கொண்டிருப்பார்கள். தன்னைச் சுற்றி ஏன் இல்லாதவர்கள் நிறையபேர் உள்ளனர் என்று அந்தப் பணக்காரன் சிந்தித்தால், ஒருவேளை தானும் பணம் இல்லாமல் இருப்பதால் தன்னைச் சுற்றி வறியவர்கள் உள்ளனர் என்று நினைக்குத் தோன்றும். ஆனால் உண்மை இதற்கு நேரெதிர் மாறானது. அவரிடமுள்ள செல்வம்தான் வறியவர்களை அவரை நோக்கி வரச் செய்கிறது. அம்மாதிரியே பணிந்துபோகக் கூடிய பெண் தன்னை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு லீடர்ஷிப் கொண்ட ஆண்மகனை வாழ்க்கைத் துணையாகத் தேடுவாள். தன் மனைவியின் பயந்த சுபாவத்தை வைத்து தானும் அவ்வாறு இருக்கிறேனோ என்று ஒருவர் நினைத்தால் அது தவறு. அவருக்கு லீடர்ஷிப் இருப்பதால்தான், பயந்து பணியும் ஒரு பெண் அவருக்கு வாழ்க்கைத் துணையாக அமைந்தார். அம்மாதிரியே ஒரு மருத்துவரைத்தேடி நோயாளிகளும் ஒரு கிரிமினல் வழக்கறிஞரைதேடி குற்றவாளிகளும் வந்தவண்ணம் இருப்பார்கள். நன்றாக பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியரைத் தேடி படிப்பு வராத மாணவர்கள் வருவார்கள். இப்படி எதிர்மாறானவர்கள் ஒருவரை ஒருவர் விரும்பி நாடுவதைபோல் ஒரே டைப்பாக உள்ளவர்களும் ஒருவரை ஒருவர் நாடி செல்வார்கள்.

நன்றாகப் படிக்கும் மாணவர்கள். தன்னைபோல் படிக்கும் மற்ற மாணவர்களுடன் விரும்பிப் பழகுவார்கள். அம்மாதிரியே படிக்காமல் ஊர் சுற்றித் திரியும் மாணவர்களும் அவர்களைப்போல் ஊர் சுற்றித்திரியும் மற்ற மாணவர்களுடன்தான் பழகுவார்கள். அதிகாரிகள் மற்ற அதிகாரிகளுடன்தான் பழகுவார்கள். எழுத்தர்கள் மற்ற எழுத்தர்களுடன்தான் பழகுவார்கள். அம்மாதிரியே குடும்பப்பாங்கானப் பெண்கள் மற்ற குடும்பப்பாங்கானப் பெண்களுடன்தான் பழகுவார்கள். அப்படி குடும்பப்பாங்காக இல்லாத பெண்கள் ஊர் சுற்றுவதில் மோகம் கொண்டவர்களாக இருந்தால், அதேமாதிரி குணம் கொண்ட பெண்களுடன்தான் பழகுவார்கள். ஆகவே Life Response-இல் இனம் இனத்தோடு சேரும் என்பதும் உண்மை. நேரெதிரானவர்களும் ஒன்று சேருவார்கள் என்பதும் உண்மை. இத்துடன் Life Response பற்றிய முன்னுரையை முடித்துக் கொள்கிறேன்.

**<u>முதல் விதிமுறை:</u> நாம் வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். எந்த நேரம் முன்னேற்றத்தை நிறுத்துகிறோமோ அப்பொழுதே நாம் வாழ்க்கையில் சரிய ஆரம்பித்து விடுகிறோம்.**

இந்த Life Response-இல் வெளிப்படும் உண்மை மறுக்க முடியாத உண்மையாகும். வாழ்க்கை என்பது தொடர்ந்து இயங்கும் ஒரு சக்தி ஆகும். அதற்கு ஈடு கொடுக்க வேண்டும் என்றால், நாமும் அதனுடனே இயங்கிக்கொண்டிருக்க வேண்டும். நாம் அப்படி இயங்க மறுத்தோம் என்றால், நம்மோடு சேர்ந்து வாழ்க்கையும் இயக்கத்தை நிறுத்துவதில்லை. அது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதால் ஒரு காலக்கட்டத்திற்குப்பின் பார்த்தால், வாழ்க்கை வெகுதூரம் முன்னேறிப் போய்விட்டது போலவும் நாம் பின்தங்கி விட்டது போன்ற உணர்வும் வரும். விமானம் பறக்கும்பொழுது தொடர்ந்து பறந்துகொண்டே இருந்தால்தான் விமானம் மேலேயிருக்கும். எந்தக் கட்டத்தில் பறப்பதை நிறுத்துகிறதோ அந்தக் கட்டத்தில் அது கீழிறங்க ஆரம்பித்துவிடும். நீச்சலடிப்பது இம்மாதிரியேதான். நீந்திக் கொண்டேயிருந்தால்தான், நம்மால் தலையை தண்ணீருக்குமேல் வைத்திருக்க முடியும். எந்தக்கட்டத்தில் நீச்சலை நிறுத்துகிறோமோ அக்கட்டத்தில் நம் தலை தண்ணீருக்குள் முழ்க ஆரம்பித்துவிடும். உடற்பயிற்சி செய்பவர்கள் இடைவிடாமல் செய்தால்தான், அவர்கள் உடலை நல்ல நிலையில் வைத்துக் கொள்ளலாம். ஏதேனும் ஒரு காரணமாக அவர்கள் ஒரு ஆறுமாதம் செய்வதை நிறுத்துவதாக வைத்துக் கொள்வோம். உதரணமாக நோய்வாய்ப்பட்டதனால், ஆறுமாதமாக படுக்கையில் இருந்தார் என்று வைத்துக் கொள்வோம். அந்த இடைவெளிக்குப்பின் அவர் மீண்டும் தன் உடலைக் கவனித்தால், அது அடையாளம் தெரியாமல் உருமாறி இருக்கும். அதாவது உருண்டு, திரண்டு இருந்த அவரின் கை, கால் தசைகள் அந்த திரட்சி எல்லாம் போய் மெலிந்து மற்றவர்களின் சாதாரண கைகள்போல் காட்சியளிக்கும். விரிந்து பரந்திருந்த அவருடைய மார்பு தசைகள் இப்பொழுது சுருங்கிக் காணப்படும். முன்பு வேகமாக ஓடியவர் இப்போது ஓடுவதற்கே சிரமப்படுவார். முன்பெல்லாம் உடம்பை நன்றாக வளைத்து ஜிம்னாஸ்டிக் செய்தவர் இப்போது உடம்பை வளைக்க சிரமப்படுவார். ஆகவே அந்த ஆறு மாத இடைவெளி அவர் உடற்பயிற்சியில் சாதித்து வைத்திருந்த முன்னேற்றத்தை எல்லாம் கெடுத்து விட்டது என்று நாம் புரிந்து கொள்கிறோம். திரைப்பட நடிகர்கள் விஷயத்தில் இதை நாம் நன்றாகவே பார்க்கலாம். சினிமாவில் நடித்துக் கொண்டிருக்கும்வரை

அவர்களுடைய உடலை நன்கு பராமரித்து வைப்பார்கள். அளவாகத்தான் உண்பார்கள். தேவையான உடற்பயிற்சி தவறாமல் செய்வார்கள். மேனியை வழவழப்பாக வைத்துக் கொள்ள தேவையான கிரீம் எல்லாம் போட்டுக் கொள்வார்கள். இக்காரணங்களால், திரையில் அவர்கள் தோன்றும்போது stylish-ஆகவும் attractive-ஆகவும் இருப்பார்கள். அவர்கள் திருமணம் செய்துகொண்டு நடிப்பதை நிறுத்தி குடும்ப வாழ்க்கைக்கு மாறியபட்சத்தில் ஓரிரு வருடங்களுக்குப்பின் அதே நடிகையை ஏதேனும் பொது இடங்களில் பார்த்தால், அப்படி கவர்ச்சியாக இருந்த அந்த நடிகையா இவர் என்று சந்தேகப்படும்படி இருப்பார்கள். ஏன் இப்படி மாறிவிட்டீர்கள் என்று கேட்டால், குடும்ப வாழ்க்கைக்கு மாறிவிட்டேன். உடற்பயிற்சி, உணவு கட்டுப்பாடு எல்லாம் போய்விட்டது. இதன்விளைவு உடல் பெருத்து. மேக்கப் போடாததால், சாதாரண குடும்பப் பெண்ணாக காட்சியளிக்கிறேன் என்பார்கள்.

இடைவிடாத கவனம் என்பது உடற்பயிற்சி, உடல்நலம் என்றிந்த இரண்டிற்குதான் பொருந்தும் என்றில்லை. யார் என்ன தொழில் செய்து கொண்டிருந்தாலும், அதில் எந்நேரமும் முழுகவனம் செலுத்தினால்தான் அந்த தொழில் சிறப்பாக இருக்கும். தொழிலில் கவனம் எந்தளவிற்கு குறைகிறதோ, அந்தளவிற்கு பாதிப்பு உடனடியாகத் தெரிய ஆரம்பிக்கும். அமெரிக்காவில் Federal Express என்று ஒரு Courier நிறுவனம் உள்ளது. அதன் லட்சியம் என்னவென்றால், அமெரிக்காவிற்குள் அவர்கள் எங்கு பார்சல் வாங்கினாலும், மறுநாள் காலை 11 மணிக்குள் delivery செய்துவிட வேண்டும். அதாவது Newyork-இல் இன்று மாலை 4 மணிக்கு பார்சல் வாங்கினால், மேற்கு கடற்கரையில் 3000மைமயிலுக்கு அப்பாலுள்ள LosAngles நகரிலுள்ள receiver-க்கு மறுநாள் காலை 11 மணிக்குள் delivery செய்வதாக வாக்களித்து Federal Express கம்பெனி வாங்கிக் கொள்கிறது. கடந்தாண்டு அவர்கள் நடத்திய ஆய்வின்படி பார்க்கும்பொழுது இந்த on time delivery-யை 97%தான் கடைபிடிக்க முடிந்திருக்கிறது மீதி மூன்று சதவீதம் செய்யவில்லை என்று கண்டறிந்தனர். இதுவே நம் நாடாக இருந்தால் 97% எட்டியுள்ளோம். இதுவே பெரிய சாதனை. எனவே நாம் திருப்தி பட்டுக்கொள்வோம். குறையாக இருப்பது மூன்று சதவிகிதம் தானே என்று சமாதானப்படுத்திக் கொள்வார்கள். ஆனால் இக்கம்பெனி அமெரிக்கக் கம்பெனி. இக்கம்பெனியின் Chariman மூன்று சதவிகிதம் குறையாக நிற்கிறது என்று கேட்டறிந்தவுடன் பதறிப்போனாராம். நமக்கு மில்லியன் கஸ்டமர்கள் இருக்கிறார்கள். அதில் மூன்று சதவிகிதம் என்றால் 30,000 கஸ்டமர்களைக் குறிக்கிறது இவர்களுக்கு நாம் நேரத்தில் delivery செய்யவில்லை என்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். ஆகவே இந்த 30000 கஸ்டமர்களையும் நாம் திருப்திப்படுத்த வேண்டும். ஆகவே இந்த வருடத்திற்கு 100% on time delivery-யை இலக்காக எடுத்துக் கொள்வோம் என்று தீர்மானம் போட்டு அதை கம்பெனி முழுவதும் ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இப்படி ஒரு இலக்கை நம் நாட்டில் Air lines, Railways, Bus Services என்று எல்லா ஸ்தாபனங்களும் எடுத்துக் கொண்டு செயல்பட்டால் நம் நாட்டின் வாழ்க்கை தரம் எந்தளவிற்கு உயரும் என்று நினைத்துப் பாருங்கள். ஜெர்மெனியில் ரயில்கள் தாமதமாக வருவதென்பது நினைத்துப்பார்க்க முடியாத ஒன்று. ஆனால் நம் நாட்டிலோ ரயில் நேரத்திற்கு வரும் என்பது நாம் நினைத்துப்பார்க்க முடியாத ஒன்றாக உள்ளது. வாழ்க்கையின் உச்சக்கட்ட perfection-னை நோக்கி நாம் பாடுபட வேண்டும் என்பது தனிநபருக்கு மட்டும்தான் என்றில்லை. தேசங்களுக்கும் இது பொருந்தும். இந்திய நாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள். வேதகாலத்தில் நாடு செழிப்பாக இருந்ததாகச் சொல்கிறார்கள். இந்திய நகரங்களிலிருந்த செழிப்பு ஐரோப்பிய நகரங்களை பிரம்மிக்க வைத்தன என்று சொல்வார்கள். பெரிய சாம்ராஜ்ஜியங்கள் நிறுவப்பட்டிருந்தன. ஆன்மிகம், விஞ்ஞானம், இலக்கியம் என்று எல்லாத் துறைகளிலும் நாடு சுறுசுறுப்பாக செயல்பட்டது. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை. நாம் அடைந்துள்ள முன்னேற்றம் போதும் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து விட்டனர் போலிருக்கிறது. ஏனென்றால், வேத காலத்திற்கு பிறகு நாம் தொடந்து சரிவைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அரசியல் ரீதியாக ஏற்பட்ட சரிவு நம் நாட்டை நோக்கி முகம்மதியர்களை படையெடுக்க வைத்தது. டெல்லியைக் கைப்பற்றிய அவர்கள் அங்கிருந்து ஆட்சி செய்ய ஆரம்பித்தார்கள். அரசியல் சுதந்திரம் பறிபோன பிறகு பொருளாதார சுபீட்சமும் நாளடைவில் மங்கிப்போனது. முகம்மதியர்களை பின்தொடர்ந்து ஆங்கிலேயர்கள் வந்தார்கள். அவர்கள் நம்முடைய அடிமைத்தனத்தை மேலும் மோசமாக்கினார்கள். அடிமை நாடு என்றாகிவிட்டபடியால், நம்மால் சுதந்திரமாக எதுவுமே செய்ய முடியாத நிலைமை வந்துவிட்டது.

வளர்ச்சி என்று நாம் பார்ப்பதெல்லாம் 1947-இல் சுதந்திரம் அடைந்த பிறகுதான் அப்பொழுதுகூட அரசியல் சுதந்திரம்தான் கிடைத்ததே தவிர சுபீட்ச முன்னேற்றம் வேண்டி அதற்கு என்று தனி முயற்சி எடுக்க வேண்டியதாயிற்று. 1965-ஆம் ஆண்டுவரை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும் என்று நாம் நினைக்கக்கூடவில்லை. நாட்டில் கடும் பஞ்சம் ஏற்படும் ஏராளமானோர் செத்து மடிவார்கள் என்று ஐ. நா உணவுக்கழகம் எச்சரிக்கை விடுத்த பிறகுதான் உணவு உற்பத்தியில் தன்னிறைவு எய்த விசேஷ முயற்சி எடுத்தோம். அதில் வெற்றியும் கண்டோம். அமெரிக்காவிற்கு சமமாக சுபீட்சத்தை அடையலாம் என்று இப்பொழுதுதான் அரசியல் தலைவர்கள் பேச ஆரம்பித்தார்கள். தலைவர்கள் பேசுவதைப் பார்த்தால் 2050-இல்தான் இது சாத்தியமாகும் என்ற வகையில் பேசுகிறார்கள்.

ஆனால் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் சொல்வதைப் பார்த்தால், அமெரிக்காவிற்கு சமமாக அடுத்த 20 வருடங்களில் நாம் முன்னேறி வரலாம் என்கிறார். இது நம்மால் நம்பமுடியாததாகத் தெரியலாம். ஆனால் சற்று நிதானித்துப் பார்த்தால், இது உண்மை என்று தெரிய வரும். இந்தியர்களின் சொந்த அனுபவமே இதற்கு நல்லதொரு சான்று. இந்நாட்டில் 2000 வருடமாக அந்தணர் வகுப்பை சேர்ந்தவர்கள் மட்டுமே படிக்கும் உரிமை பெற்றிருந்தனர். மற்ற சமுதாயத்தினர் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை படிப்பு வாசனையே இல்லாமல் இருந்தார்கள். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் அவர்களுக்கும் படிக்கும் உரிமையே வந்தது. நாம் நினைக்கலாம், 2000 வருடமாக படிப்பு வாசனையே இல்லாத சமுதாயத்தினர் 2000 வருடமாக படிப்பில் ஊறிய அந்தணர் வகுப்பை சேர்ந்தவர்களுக்கு எப்படி சமமாக வர முடியும்? அப்படி சமமாக வருவதற்கே 200, 300 வருடங்கள் ஆகாதா என்று நினைக்கத் தோன்றும். ஆனால் நடந்தது என்ன? சுதந்திரத்திற்குபின் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த அனைவருக்கும் அரசாங்கம் படிப்பு விஷயத்தில் பல சலுகைகளை அளித்தது. அச்சலுகைகளை நல்லபடியாகப் பயன்படுத்திக்கொண்ட அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் கடந்த 50 வருடங்களில் படிப்பில் நல்ல முன்னேற்றம் காட்டுகின்றனர். 1970-க்குமுன் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த I.A.S. அதிகாரிகளைப் பார்ப்பதே அரிது. ஏதோ அபூர்வமாக இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் தென்படுவார்கள். ஆனால் நிலைமை இப்பொழுது மிகவும் மாறிவிட்டது. தமிழ் நாட்டிலுள்ள I. A. S. அதிகாரிகளைப் பார்த்தால், அந்தணர் அல்லாத மற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமாகத் தென்படுகிறார்கள். அந்தணர் வகுப்பைச் சேர்ந்த ஏதோ ஓரிருவர்தான் இப்போது தென்படுகின்றனர். ஆக இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்கிறோம்? 2000 வருடமாகப் படிப்பிலிருந்த ஏற்றத்தாழ்வுகளை சுமார் ஐம்பது வருடங்களிலேயே நாம் சமன்செய்துவிட்டோம். அப்படி இருக்கும்போது அமெரிக்கா இந்தியாவைவிட பொருளாதார வளர்ச்சியில் சுமார் 400 வருடங்கள்தான் முந்தியிருக்கிறது. 2000 வருட வித்தியாசத்தை 50 வருடங்களில் சுருக்கும்போது 400 வருட வித்தியாசத்தை ஏன் 20 வருடங்களில் சுருக்க முடியாது என்று கேள்வி எழுகிறது.

மூலம் : ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவாற்றியவர்: திரு. N. அசோகன்
சொற்பொழிவாற்றிய தேதி : 24.04.2016